ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
இளவரசனைக் காணோம்

இது என்ன?

இந்தப் படத்தில் என்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரிகிறதா? தெரியாவிட்டால் 1–ல் இருந்து 22 வரை கொடுக்கப் பட்டுள்ள புள்ளிகளை இணையுங்கள். படத்தில் இருப்பது தெரிந்துவிடும்!



ராணி காமிக்ஸ் – 294 TV செப்டம்பர் 16 – 30
(மாதம் இருமுறை இதழ்) 1996

முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்

இளவரசனைக் காணோம்

பெங்காலியாவின் அடர்ந்த காட்டுக்கு அருகே பாரன்கான் என்ற மலை நாடு இருந்தது
பாரன்கான் நாட்டில் செல்வம் செழித்துக் காணப்பட்டது.
பாரன்கான் நாட்டை கிழ அரசன் ஆண்டு வந்தார்.
ரெக்சை எங்கே?
வந்துவிடுவான் அரசே!
காட்டில்— காட்டுவாசிகள் கடலில் சென்றுகொண்டிருந்தபொழுது ஒரு மிதவையில் குழந்தையைக் கண்டார்கள்.
அந்தக் குழந்தையை மாயாவி வளர்த்தார்.
அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் போலிருக்கிறாய்! உன் பெயர் ரெக்ஸ்!

குழந்தை யார் என்ற உண்மை தெரியாமல் காட்டில் வளர்ந்து வந்தது.
ரெக்ஸ் பற்றிய உண்மை வெளிப்படுகிறது.
பாரன்கான் அரசரின் மகள்தான் ரெக்சின் அம்மா!
ஆனால் அரசரோ பேரன் இறந்துவிட்டதாக நினைத்துக்கொண்டிருந்தார்.
நீ என் ரெக்சா?
தாத்தா...!
உடனே அரசர் சபையில் அறிவித்தார்.
என் பேரன் ரெக்ஸ்தான் பாரன்கான் நாட்டின் பட்டத்து இளவரசன்!

ஆனால் ரெக்ஸ் தற்போது காட்டில் உள்ள மர வீட்டில் இருந்தான்.
டயானா! நான் ஷூ அணிய வேண்டுமா?
ரெக்ஸ்! வெறுங்காலோடு அரண்மனைக்கு போகக் கூடாது!
ரெக்ஸ்! நீ மன்னன் ஆவதை நாங்கள் பார்க்கணும்!
ஆமாம் ரெக்ஸ்!
இல்லை ரெக்ஸ் மட்டும் தான் போகணும்! என்ன சத்தம்? காதைப் பிளக்கிறது!
இளவரசனை அழைத்துச் செல்ல காட்டுக்கு கெலிகாப்டர் விமானம் வந்தது.
ரெக்ஸ் அரண்மனைக்கு புறப்பட்டான்.
அம்மா! ரெக்ஸ் எப்பம்மா திரும்பி வருவான்?
இரண்டு நாளில் வந்துவிடுவான்!
ரெக்ஸ்! மகிழ்ச்சியாக போய் வா!
டயானாவும் குழந்தைகளும் மகிழ்ச்சியோடு ரெக்சை அனுப்பி வைத்தார்கள்.

பாரன்காளில்—
அரசே! ரெக்ஸ் காட்டிலிருந்து புறப்பட்டு விட்டார்!
ஆகா! இனி எனக்கு எந்த மருந்தும் தேவையில்லை!
அரண்மனையில் இரண்டு சதிகாரர்கள் பேசிக்கொண்டார்கள்.
வெருன்! உம்முடைய பங்காளி இங்கு வருகிறான்!
அந்தக் காட்டுப் பையன்தானே? வரட்டும்!
அந்தக் காட்டுப் பையனுக்கு பிறகுதான் நீர் நாட்டை ஆளமுடியும்!
அதனால்...?
அச்சிறுவனை கொல்லவா வழியில்லை! மலையில் இருந்து அல்லது ஏரிக்குள் தள்ளி அவனைக் கொல்ல வேண்டும்!

அதன்பிறகு பாரன்கான் நாடு உமக்கு வந்துவிடும்!
அதான் நீரே சொல்லிவிட்டீரே.
ரெக்சை கச்சிதமாக முடித்துவிட்டால் நாட்டை மகிழ்ச்சியுடன் ஆள வேண்டும்!
நாட்டை நிர்வகிக்க வேண்டும்! எவன் இங்கு இருப்பான்!
என்ன சொல்கிறீர்கள்?
கஜானா கைக்கு வந்ததும் பாரிசு, லண்டன், ரோம் என்று பறக்கப் போகிறேன்!
கூட நானும் உண்டுதானே?

அப்போது—
அரசே! உங்கள் பேரன்தான் வருகிறார்!
கர்னல் பெட்ரா! அரண்மனை முழுக்க துரோகிகள் இருக்கிறார்கள். அதனால் ரெக்சைப் பற்றி கவலையாக இருக்கிறது!
ரெக்சை வளர்த்தவர் மிகவும் பலசாலி. அந்தத் தைரியத் தால்தான் இருக்கிறேன்!
ஓ! அவரைத் தெரியுமே!
ஏதாவது அவசரம் என்றால் அவரை உதவிக்கு அழைத்துக்கொள்!
பிறகு— சதிகாரன் வெருன் ரெக்சை வரவேற்றான்.
வாடா என் தம்பி!
தம்பியா! யார் இவர்?
இவர் வெருன்பிரபு!

அரசருடன் எப்பொழுதும் ஒரு டாக்டர் உதவிக்கு இருப்பார்.

காட்டில்—

உடனே மாயாவி ரெக்சை பார்த்துவர குதிரையில் புறப்பட்டார்.
வாருங்கள் ரெக்சை பார்த்துவரலாம்!
அரண்மனையில்—
அரசே! சற்று ஓய்வு எடுங்கள்!
ரெக்ஸ் வந்துவிட்டான் இனி எனக்கு எதற்கு ஓய்வு?
அவனுக்கு ஒன்றைக் காட்டவேண்டும்.
அப்போது வெருன்பிரபு வந்தான்.
ரெக்ஸ்! இது யார் என்று தெரிகிறதா?
வெருன் பிரபு!
ரெக்சுடன் நான் கலந்துகொள்ளலாமா?

வெருன்! நான் ரெக்சுடன் தனிமையில் பேச வேண்டும்!
ஓ.கே. அரசே!
அந்த காட்டுப் பையனுக்கு பொக்கிசத்தை காட்ட அந்த கிழவன் முயலுகிறான்!
கோபப்படாதீர்கள் பிரபு!
தாத்தா! இவர் என் பங்காளியா?
ரெக்ஸ்! அவனை கண்டு கொள்ளாதே! அவன் ஒரு அட்டைப் பூச்சி!
ரெக்சு! பாரன்கான் நாட்டின் பொக்கிசம்தான் இந்த பொன்னும் மணியும்!

நம்மிடம் செல்வச் செழிப்பு இருப்பதால் மக்களுக்கு வரி இல்லை! அதனால் கவலை இல்லாமல் வாழ்கிறார்கள்!
அட இது தங்கம்!
நம் நாட்டில் மக்களுக்கு பள்ளி, மருத்துவமனை, வைத்திய வசதி, இராணுவம் அனைத்தும் இலவசம்!
இந்த சொத்துக்களுக்கு பாதுகாவலன் நீதான்! இதை ஏழை எளிய மக்கள் நலனுக்காக செலவிடு!
மக்கள் நலம் என்றால் என்ன தாத்தா?
காட்டில்— தொலைதூர பயணத்தால் களைத்துப்போன மாயாவி ஓர் இடத்தில் ஓய்வு எடுத்தார்.
ரெக்கக்கு தாத்தாவோடு பொழுதுபோகும்!
அவனுக்கு ஏதோ தொல்லைகள் என்று என் உள்மனது எச்சரிக்கிறது!

எப்படியும் இரண்டு நாளில் பாரன்கான் நாட்டை நெருங்கி விடுவேன்!
அரண்மனையில்—
அரசே! நீங்கள் ஓய்வு எடுங்கள்!
பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். ரெக்ஸ்! இது ஏற்றுமதி, இறக்குமதிப் பிரிவு!
அங்கே இராணுவம், போலீஸ். அந்தக் கடைசியில் தேகநலப் பிரிவு!
எல்லாவற்றையும் ரெக்சுக்கு சுற்றிக் காட்டினார்.
டாக்டர்! இதெல்லாம் எதற்கு என்னிடம் சொல்கிறார்?
அவர் கடைசி காலத்துக்கு வந்துவிட்டார்!
மறுநாள்—
தாத்தா! நான் குதிரை சவாரி போகவேண்டும்!
பால்கனிகிட்ட குதிரையை ஓட்டு! நானும் பார்க்கிறேன்!
அரசே! உங்களுக்கு நல்ல ஓய்வு தேவை!

ரெக்ஸ்! குதிரை ஓட்டுவதை இங்கிருந்து பார்க்க முடியாதே?
அந்தக் குட்டிப்பையன் குதிரை சவாரி செய்கிறானாம்! கீழே விழுந்து கழுத்து முறிஞ்சா எப்படி இருக்கும்!
எனக்கேன் வம்பு!
உடனே டிரக் ரெக்க சவாரி செய்யப்போகும் குதிரைக்கு புல்லைக் கொடுத்தான்.
இளவரசே! இந்தக் குதிரையில் சவாரி செய்தால் சொகுசாக இருக்கும்!
ரொம்ப நன்றிங்க!
இளவரசே! உங்கள் குதிரை பயங்கரமாக துள்ளுகிறது! வேறு குதிரையை ஓட்டுங்கள்!
வேணாம் பெட்ரா! இதுவே இருக்கட்டும்!

இந்தக் குதிரை குதியா குதிக்கிறதே! ம்... ஓடு!
இந்த முரட்டு குதிரையை ரெக்சால் ஓட்ட முடியுமா?
அந்தக் குதிரை அவனுடையதுதான்!
பெட்ரா ரெக்சின் குதிரையை அடக்க முயன்றார்.
ரெக்ஸ்! குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்துங்கள்!
ஆ... முடியலே... கயிற்றை கடித்து இழுக்கிறது!
ரெக்சின் குதிரை கோட்டையைத் தாண்டி எகிறிக் குதித்தது.
ரெக்சு! கிழே குதித்து விடுங்கள்!
குதிரையை சமாளிக்க முடியவில்லை! அவனுக்கு உதவுங்க!
ரெக்சு...!

குதிரை எகிறிட ரெக்சு குதிரையில் இருந்து தூக்கி எறியப்பட் டான்.
ஆ...!
ஆ... என் நெஞ்சு!
அரசே! என்னாச்சு...!
பள்ளத்துக்குள் தூக்கி எறியப்பட்ட ரெக்சு ஒரு மரக்கிளையைப் பிடித்து தொங்கினான்.
!
இளவரசே! இறுக்கமாக. பிடித்துக்கொள் ளுங்கள்!
பெட்ரா ஓடினார்.
பெட்ரா ரெக்சின் கையை பிடித்து மேலே தூக்கினார்.
அப்படித்தான் மேலே ஏறுங்கள்.

அய்யோ! குதிரைதான் பாவம்!
செத்தது செத்ததுதான்! வாருங்கள் போகலாம்!
குதிரை ஏன் திடீரென்று மிரண்டது.
குதிரைக்குவெறிபிடித்து விட்டது! எதற்கும் குதிரை லாயத்தில் பார்ப்போம்!
அப்பாடி! பாரன்கான் நாட்டுக்கு வந்தாச்சு! ரெக்ஸ் தாத்தாவோடு ஜாலியாக இருப்பான்!
ரெக்ஸ்! இதுதான் உன் குதிரை லாயம்!
இங்கே என்ன தேடுகிறீர்கள்?
அடடா! இந்தப் புல்லை குதிரைக்கு தின்னக் கொடுத்து வெறியூட்டி ருக்காங்க!

வெறியூட்டுகிற புல்லா? யாருடைய வேலை இது?
அதையும் கண்டு பிடிக்கிறேன்!
இளவரசே! உங்கள் தாத்தா அழைக்கிறார்!
இளவரசே! நீங்கள் குதிரையில் இருந்து விழுறதைப் பார்த்ததும் தாத்தா அதிர்ச்சி அடைந்து விட்டார்!
ரெக்ஸ் தாத்தாவை சந்தித்தான்.
ரெக்ஸ்! உனக்கு ஏதும் அடிபடவில்லையே?
தாத்தா! நான் நன்றாக இருக்கிறேன்!
கர்னல் பெட்ரா! ரெக்சை கவனமா பார்த்துக்கொள்!
ஆகட்டும் அரசே!
தாத்தா ரெக்சை கர்னலிடம் ஒப்படைத்துவிட்டு உயிரை விட்டார்.
!!
வாருங்கள் இளவரசே!

நான் குதிரை சவாரி செய்ததினால்தான் என் தாத்தா இறந்துவிட்டார்!
தாத்தா...! தாத்தா...!
ரெக்ஸ் கதறி அழுதான்.
இளவரசே! எவ்வளவோ முயன்றும் உன் தாத்தாவை காப்பாற்ற முடிய வில்லையே.
நன்றி டாக்டர்!
இளவரசே! ஈமச்சடங்குகளை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்?
பெட்ரா! அதை நீங்களே முடிவுசெய்யுங்க!

வாக்கர் மாமாவை கண்டிப்பாக வரவழைக்கணும்!
காட்டிலிருக்கும் மர வீட்டில் மணி அலறியது.
டிரிங்...! டிரிங்...! டிரிங்...!
இளவரசே! அங்கே எந்தவித பதிலும் இல்லையே?
வேறு எண்களில் தொடர்பு கொள்ளுங்கள்!
டயானாவின் அலுவலகத்துக்கு தொடர்புகொண்டார்கள்.
டயானா இங்கு இல்லை! நீங்கள் யார் பேசுகிறது?
ஐ.நா. ஆப்பிரிக்க ஆசிய மனித உரிமைக் கழகம்.
டயானா... தலைவர்!
அதேநேரம் டயானா குழந்தைகளுடன் வெளியே சென்று இருந்தார்.
அம்மா! ரெக்சை பார்க்கணும்
ஆமாம் அம்மா!
ரெக்ஸ் அவன் தாத்தாவைப் பார்க்கப் போயிருக்கிறான்!
இளவரசே! வாக்கருக்கும் தொடர்பு கிடைக்கவில்லை!
தொடர்ந்து முயற்சி செய்யுங்கள்!
இதை கழட்டிவிடவா

இளவரசே! இது தாத்தாவோடது. அரச உடை! சவ ஊர்வலம் தயார்!
என் வீட்டிலிருந்தா சவ ஊர்வலம் புறப்படுகி
நகருக்குள் சென்று ரெக்சை பார்க்க வேண்டும்!
ஹீரோ! டெவில்! பத்திரமாய் இங்கே இருங்க நான் வருகிறேன்!
சவ அடக்கம் தொடங்கியது.
ஆழ்ந்த அனுதாபம் இளவரசே!
வாருங்கள் வெருன்பிரபு!
சே! பொடியன் தப்பிவிட்டானே?
இன்னும் எத்தனை நாளைக்கு உயிரோடு இருக்கப்போகிறான்!

அவன் கதையை முடிக்க வேறு வழி இருக்கிறது!
எனக்கு எதுக்கு வம்பு?
மாயாவி நகருக்குள் வந்தார்.
நகரில் ஏன் இத்தனை கூட்டம்?
உமக்குத் தெரியாதா? அரசரின் சவ ஊர்வலம் போகிறது!
அதோ அவர்தான் புது இளவரசர்!
இளவரசர் வாழ்க!
அடடா! அரசர் மிகவும் நல்லவர் ஆயிற்றே...!
ரெக்க மரணம் என்றால் பயப்படுவானே?

புது இளவரசன் எப்படி?
காட்டுப் பையன் ஆயிற்றே? அவன் எங்கே நிலைக்கப் போகிறான்?
ஏன் நிலைக்க மாட்டான்? சொல்!
யார் நீ?
வந்து...! அரண்மனையில்தான் பதவிக்காக ஒரு ஓநாய்க் கூட்டம் இருக்கிறதே!
வேணுமானால் பாருங்கள்! ஒரு வாரத்தில் இளவரசருக்கு விபத்து இருக்கிறது!
இதற்குமுன் விபத்து ஏற்பட்டதா? எப்படி?
வெறிபிடிச்ச குதிரையில் சவாரி செய்து சாவை தழுவியிருக்கணும்! எப்படியோ பிழைத்துக்கொண்டார்!
அதைப் பார்த்த அதிர்ச்சியில்தான் அரசருக்கு மாரடைப்பு வந்து இறந்துவிட்டார்!

நடந்தது உண்மைதான்! அதற்குள் அந்த ஆள் மாயமாகிவிட்டாரே?
வெருன்பிரபு! நம் திட்டப்படி கர்னல் பெட்ராவை சந்திப்போம்!
உன் திட்டம் என்று சொல்! அதில் என்னை ஏன் இழுக்கிறாய்?
வெருன்பிரபு! இது நம் திட்டம்தான். உமக்காகத் தான் பாடுபடுகிறேன்!
ஓகோ...!
பெட்ரா! நான் இளவரசரின் படுக்கை அறையை காவல் காக்கிறேன்!
காப்டன் டிரக்! அது காவலாளிகளின் வேலை!
இளவரசர் கவலை எனக்கு! அதனால் நான் காவலனா இருக்கேன்!
வெறிக் குதிரையில் இளவரசன் தப்பியதே பெரிய விசயம்!
ஓ...! வெறிக் குதிரையைப் பற்றி என்ன அறிவீர்!

என் உயிரைக் கொடுத்தாவது இளவரசரை காப்பாற்றுவேன்!
இளவரசே! நான் காப்டன் டிரக்! உங்களது காவலுக்கு நியமிக்கப் பட்டிருக்கிறேன்!
கர்னல் பெட்ரா!
பெட்ரா! எனக்கு காவலர் யாரும் வேண்டாம்! இரவில் அருகில் இருந்தால் தூக்கம் வராது!
இளவரசே! உங்களது பாதுகாப் புக்காகத்தான்!

விபத்து பற்றிய உண்மை தெரியும்வரை உங்களுக்கு பாதுகாப்பு அவசியம்! காப்டன் டிரக்கே முன்வந்திருக்கிறார்!
நீங்கள் சொன்னால் சரிதான்!
ரெக்ஸ் பத்திரமாக இருக்கிறான்!
கர்னல் பெட்ரா ஓய்வெடுக்க தன் அறைக்குச் சென்றார்.
மாயாவி பீரோவுக்குள் மறைந்திருந்தார்.
அட.... நீங்களா? எப்பொழுது வந்தீர்கள்?
உங்களுக்காகவே காத்திருந்தேன்!
நீங்கள் வந்தது இளவரசருக்கு தெரியுமா?
விபத்துக்கு காரணம் தெரிகிறவரை ரெக்சுக்கு நான் வந்தது தெரியவேண்டாம்!

ரெக்ஸ் வெறிக்குதிரை விபத்தில் இருந்து தப்பியதை கேள்விப்பட்டேன்!
குதிரை வாயில் வெறிஏற்றுவதற்கான புல் இருந்தது?
ரெக்சை மரணத்தின் விளிம்புக்கு இழுத்துச் செல்லக் காரணமே அந்த வெறிப் புல்தான்!
அந்தப் புல் எப்படி குதிரை லாயத்திற்கு வந்தது?
இது யாருடைய வேலையோ தெரியவில்லை!
ரெக்சை தீர்த்துக்கட்ட முயன்றிருக்கிறார்கள்! ஆனால் திட்டம் பலிக்கவில்லை!
சரி! ரெக்ஸ் இறந்தால் இங்கு யாருக்கு ஆதாயம்?
மாயாவி ஆழ்ந்து சிந்தித்தார்.

அவருக்கு அடுத்த வாரிசு வெருன்பிரபுதான்!
ஆனால் அவர்தான் சதி செய்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை!
வெருன்பிரபு எப்படி?
மைனர் போல ஊதாரி, சூதாடி, பணம் பணம்ன்னு அலைவான்.
குதிரை லாயத்துக்கு அருகே அவரை யாராவது பார்த்திருக்கிறார்களா?
இல்லை!
இனி என்ன செய்யணும் தெரியுமா?
பிரபு! இது அபாய வேலை!
காப்டன் டிரக் காவலை அனுப்பிவிட்டு கதவு தட்டுவதற்காக காத்திருப்பார்!

இளவரசர் ரெக்சின் படுக்கை அறை.கதவு தட்டப்பட்டது.
டொக்...! டொக்...!
அந்தச் சத்தம் ரெக்சை எழுப்பியது.
?
ஒரு கை ஈரத் துணியுடன் ரெக்சை நெருங்கியது
உடனே ரெக்ஸ் அவன் கையைப் பிடித்துக் கடித்தான்.
ஆவ்...வ்...!
பிடியுங்கள் இவனை!
தடுக்கவந்த அடுத்தவனை ரெக்ஸ். கடுமையாக தாக்கினான்.
ஆ...!
படார்...!

அவர்களிடமிருந்து ரெக்ஸ் தப்ப முயன்றான்.
அவனை மடக்கிப் பிடியுங்க!
?!
உடனே ரெக்ஸ் டிரக்கின் மெடலைப் பறித்தான்.
காப்டன் டிரக் நீயா?
ரெக்ஸ் அந்த மெடலை வைத்து டிரக்கின் கன்னத்தில் கிறினான்.
ஆ... அம்மா...!
நீயெல்லாம் ஒரு காவலனா?
ரெக்ஸ் டிரக்கின் கன்னத்தில் குறி போட்டான்.
டேய்... எருமை மாடுகளா? இந்தப் பொடியனைப் பிடியுங்கள்!

பொடியன் புலி போல சீறுகிறானே?
அதற்குள் ஒருவன் நனைந்த துணியை ரெக்சின் மூக்கில் வைத்தான்.
ஆவ்வ்வ்...!
ரெக்ஸ் மயங்கி விழுந்தான்.
காப்டன்! இவன் மயக்கமடைந்து விட்டான்!
சரி! இப்போது நீங்கள் என்னை அடித்து உதைப்பது போல உதையுங்கள்!
ஆ... வலிக்குது!
பட்...!
வெருன்பிரபு சொன்னபடியே செய்கிறேன்!

என்னைக் கட்டிப்போட்டு வாயில் துணியை வைத்து அடை! அவனை சாக்கில் போட்டு கட்டுங்க!
மயங்கிக்கிடந்த ரெக்சை சாக்குப் பைக்குள் போட்டார்கள்.
கடத்தல்காரர்கள் ரெக்சை தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.
கர்னல் அறையில் இருந்த மாயாவிக்கு ஏதோ நினைவு தட்டுப்பட்டது.
ரெக்ஸ் உயிருக்கு ஆபத்து என்று நினைக்கிறேன்!
?
ரெக்சை இனி எந்த ஆபத்தும் நெருங்கவிடமாட்டேன்!
வெருன்பிரபு சதி செய்யா விட்டால் அவருடைய நெருங்கியத் தோழர் யார்?
காப்டன் டிரக் மட்டும்தான் உண்டு!

உடனே மாயாவி ரெக்சை சந்திக்க கோட்டையில் ஏறினார்.
ரெக்சுக்கு ஆபத்து என்பது என் கற்பனையாக இருக்குமோ?
ரெக்ஸ்! அசதியில் தூங்கிக்கொண்டிருப் பான் என நினைக் கிறேன்!
ரெக்ஸ் அறைக்குள் எட்டிப் பார்த்தமாயாவி அதிர்ந்து போனார்.
டிரக்கின் கட்டுக்களை அவிழ்த்து விட்டார்.
ரெக்சை எங்கே?
தெரியாது! நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார். அப்போது கதவு தட்டப்பட்டது.
கதவை திறக்க முயன்றேன்.
யார் அது?
கர்னல் பெட்ரா!

கதவைத் திறந்ததும் இரு முகமூடிகள் என்னை அடித்துப் போட்டுவிட்டு ரெக்சை தூக்கிச் சென்று விட்டார்கள்.
படார்...!
ஆ...!
கோட்டையின் எல்லா வாசலையும் இழுத்து மூடுங்கள்!
படார்...!
படார்...!
பாரன்கான் நாடு முழுக்க தேடுவோம்!
பாரன்கான் நாடு அந்த இரவு நேரத்தில் பரபரப்பானது.
ரெக்சை கடத்தியவர்கள் கோட்டையைவிட்டு வெளியேறி காட்டுக்குள் புகுந்தார்கள்.
நாம் சரியான நேரத்தில் தப்பினோம்!
கோட்டை முழுக்க கடத்தல்காரர்களை தேடினார்கள்
இளவரசர் ரெக்சை காணோமே!

கர்னல் பெட்ரா! அரண்மனையை விட்டுப் போயிருக்க வாய்ப்பில்லை! இங்கே காவலுக்கு ஆள் இல்லையா?
அரண்மனை— நகர் வாசலில் காவல் இல்லை!
காப்டன் டிரக்தான் அந்தக் காவலை நீக்கினார்!
!
முதலில் என்னை அவிழ்த்துவிடுங்க!
ஏன்?
கடத்தல்காரர்கள். உம்மை தாக்கியதாக கூறினீரே?
ஆமாம்!
அவர்கள் தாக்குதலை சமாளிக்க நீர் முயல வில்லையா?

வாளை எடுக்க திரும்பினேன். அதற்குள் என்னை தாக்கிவிட்டார்கள்?
பிறகு எப்படி கன்னத்திலே கிரல் விழுந்தது?
தரையில் கிடந்த இந்த மெடல் உம்முடையதா?
ம்... ஆமாம்!

மெடல் பிய்ந்து இருக்கிறது! இதை வைத்து முகத்தை சொறிஞ்சீரா?
நினைவு இல்லை!
கேலி செய்யாதீங்க! முதலில் அவிழ்த்து விடுங்க!
உம்மை தாக்கினபிறகுதான் இது நடந்திருக்கணும்!
டிரக்! நீ சொன்னதெல்லாம் பொய்!
இந்தக் கீரல் எப்படி

ரெக்ஸ் தப்பிப்பதற்காக மெடலை வைத்து பிராண்டி இருப்பான்!
இது ரெக்சோட குறிதான்!
?
கீறல்களை உன்னிப்பாக பாருங்கள்! புரியுதா?
ஆமாம்! இது ரெக்ஸ் குறிதான்!
இவன் எத்தன் என்று இதற்கு அர்த்தம்!
ஏய்...! ரெக்ஸ் எங்கே? மரியாதையாக சொல்லு!.
எனக்குத் தெரியாது!
வெருன்பிரபு அறையைவிட்டு வெளியே வந்தார்.
இங்கே என்ன கலாட்டா?
வெருன்பிரபு! இளவரசரைக் காணவில்லை! டிரக்கை விசாரிக்கிறார்கள்!

அதே நேரம் காட்டில்—
இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்!
வெருன்பிரபு புலி நடமாடும் காட்டில் இவனை விடச் சொன்னார்.
ஏய்... ரெக்சுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டது என்றால் உன்னை தொலைத்து விடுவேன்!
மாயாவி எரிமலையானார்.
படார்...!
இங்கே என்ன நடக்குது!
வெருன்பிரபு!
வாருங்கள்! உங்களுக்காகத்தான் காத்திருக்கோம்!
ஆ....!
தடால்...!

பெட்ரா! இந்த முகமூடி யார்?
அது இருக்கட்டும்! ரெக்ஸ் விசயமாக உங்களை விசாரிக்கணும்!
ரெக்சுக்கு என்ன? அவனுக்கு அடுத்த வாரிசு நான்தானே?
அவன் கிடைக்கிறவரை நானே இந்நாட்டுக்கு அரசன்!
ரெக்ஸ் காணாமல் போனதற்கு நீயும் உடந்தை என்ற டிரக் சொல்கிறானே?
நிச்சயமாக இல்லை!

முகமூடி! உன்னைப்பற்றி கேள்விப்பட்டிருக்கேன்! இளவரசர் காணாமல் போனதற்கு உங்கள் இருவரையும் கைது செய்கிறேன்!
இவர்களை கைது செய்!
இந்த முகமூடி இளவரசர் ரெக்சின் வளர்ப்புத் தந்தை!
பெட்ரா! நமது இராணுவத்தின் தலைவர்!
காப்டன் டிரக்! கடத்தல் காரனுக்கும் பெட்ராவுக்கும் தொடர்பு உண்டா?
ஆமாம் பிரபு!
ரெக்சுக்கு என்ன? அவனுக்கு அடுத்த வாரிசு நான்தானே? அவன் கிடைக்கிறவரை நானே இந்நாட்டுக்கு அரசன்!

ரெக்ஸ்! திரும்பி வரும்வரை இவர்களை சிறையில் அடையுங்கள்!
என் பேச்சை தட்டினால் அவன் தலை உருளும்!
ரெக்ஸ் குதிரைக்கு வெறிப்புல் கொடுத்தபோது அதை நீரும் தின்றீரா?
வெறிப்புல் இரகசியமான செய்தி! அதுபற்றி உமக்கு எப்படித் தெரியும்!
எனக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது!
நீ சொன்னதால் அது எனக்குத் தெரியும்!
அப்படியானால் அதை ஒத்துக்கொள் கிறீர்கள்!

நிறுத்துங்கள்! இங்கு நான்தான் அரசன்! வீரர்களே! இவர்களை கைது செய்! திமிறினால் சுட்டுத்தள்ளு!
இவரா அரசர்!
இருக்கலாம்! எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம்!
கண்சிமிட்டுகிற நேரத்துக்குள் மாயாவியின் துப்பாக்கி வெடித்தது.
!!
டுமீல்...!
டுமீல்...!
வெருன்! ரொம்பவும் ஆர்ப்பாட்டம் செய்யாதே! ரெக்சை எங்கே?
எனக்குத் தெரியாது!

உடனே வெருன்பிரபு தப்பி ஓட முயன்றான். மாயாவியிடம் அது நடக்குமா? படக்கென்று பாய்ந்து அவனை பிடித்துக்கொண்டார்.
ஆ...!
டமால்
ரெக்ஸ் எங்கே? சொல்!
இதோ இவன்தான் ரெக்சுக்கு காவலாக இருந்தான்.
முட்டாள்! என்னையா காட்டிக் கொடுக்கிறாய்?
ரெக்சை கொல்லுவதற்கு குதிரைக்கு வெறிப்புல்லை கொடுத்தது இவன்தான்!
இல்லை! நான் அப்பாவி!

மாயாவி இருவரையும் தாக்கினார்.
இருவருமே சதிகாரர்கள்தான். மரியாதையாக ரெக்ஸ் எங்கே என்று சொல்லிவிடுங்கள்!
தடால்...
உண்மையைச் சொல்லா விட்டால் இருவரும் காலி! சொல். எங்கே ரெக்ஸ்?
மாயாவி இருவரையும் நையப்புடைத்தார்.
ஆ...! உண்மையை சொல்லி விடுகிறேன்!
அவனை காட்டுக்குள் கடத்திச் சென்றார்கள்.
எங்கே?
புலி தண்ணீர் குடிக்க வருமே? அந்த இடத்துக்கு...!

காட்டு எல்லையில் அந்த குளம் இருக்கிறது!
எனக்குத் தெரியும்!
உடனே மாயாவி குதிரையில் ஏறி ரெக்சை காப்பாற்ற காட்டை நோக்கி விரைந்தார்.
அதேநேரம்— ரெக்சை கடத்திச் சென்றவர்கள் அந்தக் குளத்தை நெருங்கினார்கள்.
குளம் இந்த சரிவில்தான் இருக்கிறது!
இரவிலும் புலி தண்ணீர் குடிக்க இங்கே வரும்!

இரவில் அங்கேயே தங்க திட்டம் போட்டார்கள்.
தீயைக் கண்டால் எந்த மிருகமும் நம்மை நெருங்காது. காலையில் இவனை குளத்துப் பக்கம் விட்டுச் செல்வோம்!


இரவில் சென்றால் நமக்கும் ஆபத்து!
ரெக்ஸ் கண்விழித்தான்.

குளக்கரையில் சிங்கம், புலி என்று மிருகங்கள் வந்து தண்ணீர் குடித்துச் சென்றன.

ரெக்சை கடத்தியவர்கள் திரும்பியிருக்கிறார்கள். அருகில்தான் இருக்க வேண்டும்!
வா டெவில்! மெல்ல நடந்துசெல்வோம்!
அப்பாடி! விடிந்துவிட்டது! இனி இவன் கதையை முடிப்போம்!
சரி! அவனை சாக்குப் பையில் இருந்து வெளியே எடு!
ஏன்?
இவனை சாக்குப் பையில் போட்டு வந்தால் புலி எப்படி இவனை தின்னும்? வெருன்பிரபுதான் அவனை வெளியே எடுத்துப் போடச் சொன்னார். தடயம் எதுவும் விடக் கூடாது!
ரெக்சை வெளியே இழுத்துப் போட்டார்கள்.
அவனது உடைகள், இந்த சாக்குப் பையை நெருப்பிலிட்டு கொளுத்திவிட்டால் தடயம் இடையாது!

அவர்கள் பேசிக்கொண்டே ரெக்சை நோக்கி குனிந்தபோது ரெக்ஸ் பட்க்கென்று அவர்களை தாக்கினான்.
ஆ...!
படார்...!
அடுத்தவன் வயிற்றில் வேகமாக முட்டித் தள்ளினான்.
உம்...!, ஆ...வ்...!
இருவரும் தாக்குண்டதால், ரெக்ஸ் அவர்களிடம் இருந்து தப்பி ஓடினான்.
மலைச்சரிவில் இவனை சுமந்து செல்ல இருந்த சுமையை குறைத்து விட்டான்!
சரியான பொடியன்தான்!

நாம் இருவரும் சேர்ந்தே அவனை சுடுவோம்! ஒன்று... இரண்டு...!
திடீரென்று மாயாவி அவர்களுக்கு பின்னே இருந்து அவர்களைச் சுட்டார்.
டேய்... துப்பாக்கியை கீழே போடு! இல்லை உன் தலை வெடித்துச் சிதறிவிடும்!
கும்...!
முட்டாள்! உனக்கு என்ன தைரியம்?
கும்...!
மாயாவி அவர்களையும் தாக்கினார்.
மாமா...!
ரெக்ஸ்!
இருவரும் தழுவிக்கொண்டார்கள்.
இப்பதான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது!
நல்ல நேரத்தில் வந்தேன்!

இதோ அந்த புலியும், சிங்கமும் என்னை தின்னக் காத்திருந்தது மாமா!
துப்பாக்கி சத்தம் விரட்டி விட்டது!
எப்படியும் அவைகள் திரும்பி வரும்! இவர்களை இரையாக்குவோமா?
!!
டேய்...! இவனை கடத்தச் சொன்னது யார்?
ம்..ம்...! வந்து...!
உஷ்...!
மாமா! எனக்குத் தெரியும்!

மாமா! எனக்கு காவலாக இருந்தானே டிரக்...! அவன்தான்!
அவருடன் வெருன்பிரபுவும் உண்டு!
அவருமா? அதனால்தான் தாத்தா என்னை எச்சரிக்கையா இருக்கச் சொன்னாரா?
பாரன்கான் நாட்டுச் சட்டப்படி உங்களுக்கு ரெக்ஸ் மரண தண்டனை வழங்கலாம்!
மாமா... நானா?
உங்கள் தலையை சீவிவிடச் சொல்லட்டுமா?
எப்படி மாமா?
நம் காட்டில் விசாரிப்பது போல இங்கு விசாரணை எதுவும் கிடையாதா?
உண்டு! நீ விசாரிக்கவேண்டுமானால் ஆதாரம் வேண்டும்.

நீங்கள் டிரக்குக்கும், வெருன்பிரபுக்கும் எதிராக சாட்சி சொல்வீர்களா?
என்ன விளையாடுறியா?
மக்களாட்சியில் யாரையும் கட்டாயப்படுத்தக்கூடாது ரெக்ஸ்!
முடியாது! இப்ப என்ன செய்யலாம் மாமா?
இவர்களை சிங்கம், புலி தின்னட்டும்!
!
!

ரெக்சை அலைகளுக்கு
இரையாக்க
நினைத்தீர்கள்!
!


இப்பொழுது நீங்களே
அதற்கு பலியாகுங்கள்!
சிங்கத்துக்கு ஒரு
மாறுதலாக இருக்கும்!
!!


எங்களை விட்டுச்செல்லாதே!
நான் சொல்கிறேன்!
?

இளவரசே! இவர்கள் நமக்கு சாட்சியாக மாறுகிறார்கள்!
மாமா! நீங்களும் என்னை அப்படி அழைக்காதீர்கள்!
நாட்டில்—
சட்டப்படி வெருனாகிய நான்தான் அரசன்!
நடந்த சதியை ஒத்துக்கொண்டதால் பாரன்கான் நாடு உம்மை அரசனாக ஏற்காது!
அந்த முகமூடிக்கு பயந்துதான் ஒப்புக்கொண்டேன்!
ஏய்... பெட்ரா! என் முதல் ஆணை உன்னைச் சுட்டுக் கொல்வதுதான்!
!
மாயாவி அங்கு வந்தார்.

பிறகு ரெக்ஸ் அரியாசனத்தில் அமர்ந்தான்.
அரசே! இவர்கள் செய்த சதிக்கு ஆதாரம் இருக்கிறது!
சட்டப்படி விசாரணை நடக்கும்!
இளவரசனை கடத்தச் சொன்னவர் யார்?
யாரும் சொல்ல வில்லை!
மாயாவி மறைந்திருந்து நடப்பதை நோட்டமிட்டார்.
ஏய்... சத்தமாக சொல். இல்லை...!
இவர்கள்தான் இளவரசனை கடத்தச் சொன்னார் கள்!

உம்...! ரெக்ஸ் மேலே சொல்!
வெருன்! டிரக்! நீங்கள் அரசனான எனக்கு எதிரா குற்றம் செய்ததால்... நாடு கடத்தவா? இலலை மரண தண்டனை வேணுமா!
நாங்கள் நாட்டைவிட்டே போகிறோம்!
நாடு கடத்தப்பட்ட நீங்கள் காட்டுவாசிகளோடு சாகும்வரை இருக்கணும்!
காட்டுவாசிகளோடா?
காட்டுவாசிகளுக்காக நீங்கள் உழைக்கணும்!
நரமாமிசம் சாப்பிடுகிறவர்கள் இவர்கள்! உழைக்காவிட்டால் அடித்து தின்றுவிடுவார்கள்!
ஆ...!

மாமா! உண்மையிலேயே இவர்களை தின்பார்களா?
இல்லை ரெக்ஸ்! சும்மா பயம்காட்டினேன்!
மாமா! என்னை விட்டுச் செல்லாதீர்கள் மாமா!
ரெக்ஸ்! எங்கள் நினைவு வந்தால் காட்டுக்கு வா! நாங்களும் வருகிறோம்!
ரெக்ஸ்! உனக்கு ஒரு ஆபத்து என்றால் நான் எங்கிருந்தாலும் ஓடி வருவேன்!
(முடிந்தது)

16

முன்கதை கருக்கம்:-

சகல சக்திகளைப் பெற்ற மாயன் என்ற மந்திரவாதி, எழில்புரி நாட்டு இளவரசி பொற்செல்வியின் அழகில் மயங்கி அவளை மணக்க விரும்பினான். அவள் மறுக்கவே எழில்புரி நாட்டையே கல்லாக்கி விட்டான். பொற்செல்வி மனம் மாறும்வரை நீ தங்கக்கிளியாக மாறிப்போ என்று சாபமிட்டான். தன்னையும் தன் நாட்டையும் மீட்க ஒரு வீரனைத் தேடி அலைந்தாள். முடிவில் சிங்கபுரி இளவரசன் அஞ்சாநெஞ்சனை கண்டுபிடித்து அவனிடம் உதவி பெற முயன்றாள்.

தன் தலைக்கு மேலே பறந்துவந்த மாயக் கம்பளத்தை அவன் பார்க்கவில்லை. ஆனால், கம்பளத்தில் அமர்ந்து இருந்த புலிக்கண்ணன் அவனைப் பார்த்துக்கொண்டே வந்தான்.

திடீர் என்று ஒரு புதரில் இருந்து ஒரு புலி வில்லாளன் மீது பாயத் தயார் ஆயிற்று.

கண் இமைக்கும் நேரத்துக்குள் வில்லாளன் ஓர் அம்பைத் தொடுத்தான்.

அம்பு குறிதவறாது புலியின் மீது பாய்ந்தது. உடனே புலி செத்து விழுந்தது.

இதைப் பார்த்த புலிக்கண்ணன், 'அவன் மாவீரனாக இருப்பான் போலிருக்கிறதே' என்று நினைத்தான்.

'அவன் வீரன். அவனை உதவிக்கு வைத்துக்கொள்வது நல்லது.'

'அவனும் தங்கக்கிளியைத் தேடிப் போவது போல தெரிகிறது. அவனை அழைத்து அருகில் வைத்துக்கொண்டால் தங்கக்கிளியை அவன் பிடிக்க முடியாமல் தடுத்துவிடலாம்.'

இவ்வாறு திட்டமிட்டபடி புலிக்கண்ணன் கம்பளத்தை இறக்கினான்.

வில்லாளன் நின்றான்.

"இந்தக் காட்டுக்குள் எங்கே போய்க்கொண்டு இருக்கிறாய்?" என்று புலிக்கண்ணன் கேட்டான்.

"தங்கக்கிளியை தேடிக்கொண்டு இருக்கிறேன்" என்று வில்லாளன் சொன்னான். "நீங்கள் பார்த்து இருக்கிறீர்களா?" என்று புலிக்கண்ணனைக் கேட்டான்.

"நானும் தங்கக்கிளியைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறேன்" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

"அப்படியா? சரி நீங்கள் இந்தக் காட்டில், தேடுங்கள். நான் வேறு இடத்துக்குப் போகிறேன்" என்று வில்லாளன் சொன்னான்.

"நாம் இருவருமாக சேர்ந்து தேடினால், தங்கக்கிளியை சீக்கிரம் பிடித்துவிடலாம் அல்லவா?"

"உண்மைதான். ஆனால், பரிசை எப்படிப் பகிர்ந்துகொள்வது?"

"நீ இளவரசியை வைத்துக்கொள் நான் முடிசூட்டிக்கொள்கிறேன்."

"சரி, அவ்வளவு பெரிய நாடு எனக்கு எதற்கு! எனக்கு இளவரசி போதும்."

"இது பறக்கும் கம்பளம். இதில் ஏறிக்கொள்."

"எங்கே போகிறோம்."

"தங்கக்கிளி ஒரு மந்திரவாதியுடன் இருக்கிறது. மந்திரவாதி இருக்குமிடம் எனக்குத் தெரியும். அங்கேதான் நான் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றான் புலிக்கண்ணன்.

அதைக் கேட்டு வில்லாளன் மகிழ்ச்சி அடைந்தான். மாயக் கம்பளத்தில் அவன் ஏறிக்கொண்டான்.

இருவரையும் சுமந்துகொண்டு கம்பளம் பறந்தது.

இளவரசன் அஞ்சாநெஞ்சன் இரவு பகலாகத் தொடர்ந்து பயணம் செய்தான்.

அவன் குதிரையில் பின்னே வர, இளவரசி பொற்செல்வி முன்னே

...கொண்டிருந்தாள்.

கண்ணுக்கு எட்டிய இடைவெளியில் இருவரும் போய்க் கொண்டிருந்தார்கள்.

நாலு கடல்களைத் தாண்டிவிட்டார்கள். இன்னும் மூன்று கடல்களைத் தாண்டிவிட்டால் மேகமலையை அடைந்துவிடலாம்.

இடையில் ஒரு சிறிய மலை. அந்த மலையைக் கடந்துகொண்டு இருந்தார்கள்.

அப்போது மாயக் கம்பளத்தில் வில்லாளனும், புலிக்கண்ணனும் வந்துகொண்டிருந்தார்கள்.

தங்கக்கிளி பறந்து செல்வதை வில்லாளன் பார்த்தான். "அதோ தங்கக்கிளி" என்று புலிக்கண்ணனிடம் காட்டினான்.

"தங்கக்கிளியை விரட்டிக்கொண்டு ஒருவன் பின்னேயே குதிரையில் வருகிறானே" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

"நம்மைப் போல அவனும் தங்கக்கிளியைப் பிடிக்க போகிறான் போலிருக்கிறது" என்றான் வில்லாளன்.

"அவன் நம்மைவிட கெட்டிக்காரனாக இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் தங்கக்கிளியை கண்ணால்கூட பார்க்கவில்லை. அவனோ தங்கக்கிளியைப் பார்த்து அதைப் பிடிக்க விரட்டிக்கொண்டு வருகிறான்" என்றான் புலிக்கண்ணன்.

தங்கக்கிளி முன்னே பறந்தாலும் அஞ்சாநெஞ்சன் அதன் பின்னே குதிரையில் வந்தாலும் அவன் தங்கக்கிளியைப் பிடிக்க விரட்டிக் கொண்டு போவதாக அவர்கள் நினைத்தார்கள்.

தங்கக்கிளியோ, குதிரையில் போய்க்கொண்டு இருந்த அஞ்சாநெஞ்சனோ இவர்களைக் கவனிக்கவில்லை.

பறக்கும் கம்பளத்தை புலிக்கண்ணன் தாழ்வாக இறக்கினான்.

"நில் வீரனே!" என்று குரல் கொடுத்தான்!

அப்பொழுது அஞ்சாநெஞ்சன் திரும்பிப் பார்த்தான்!

"தங்கக்கிளியை உன்னால் பிடிக்க முடியாது" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

அவர்கள் தங்கக்கிளியை பிடிக்க வருகிறார்கள் என்று அதில் இருந்து அஞ்சாநெஞ்சனுக்குப் புரிந்தது.

அவன் கால்களினால் குதிரையின் வயிற்றை மெல்ல உதைத்தான். உடனே அது கனைத்தது.

அந்த ஓசை கேட்டு முன்னே பறந்துகொண்டிருந்த இளவரசி திரும்பிப் பார்த்தாள்.

பறக்கும் கம்பளத்தில் இருவர் அமர்ந்து இருப்பதைப் பார்த்ததும், அவள் 'விருட்' என்று பறந்துசென்று ஒரு மரத்தில் மறைவாக அமர்ந்துகொண்டாள்.

அஞ்சாநெஞ்சன் குதிரையில் இருந்து கீழே இறங்கினான்.

பறக்கும் கம்பளமும் கீழே இறங்கியது.

புலிக்கண்ணன், வில்லாளன் இருவரும் அதிலிருந்து இறங்கினார்கள்.

அவர்கள் பறக்கும் கம்ளத்தில் வந்ததால், அவர்களிடம் மந்திரசக்தி ஏதும் இருக்கக்கூடும் என்று அஞ்சாநெஞ்சன் நினைத்தான்.

மந்திரவாதி மாயனை எதிர்த்துப் போராட, அந்த சக்தி பயன்படும் என்று அவன் கணக்கிட்டான்.

ஆகவே அவனே அவர்களிடம் நேரில் பேசினான். "நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்?". என்று கேட்டான்.

"உன்னைப் போலவே நாங்களும் தங்கக்கிளியைப் பிடிக்கத்தான் வந்துகொண்டிருக்கிறோம்" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

"நான் தங்கக்கிளியை பிடிக்க போவது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று அஞ்சாநெஞ்சன் கேட்டான்.

"தங்கக்கிளியை நீங்கள் விரட்டிக்கொண்டு வந்ததை நாங்கள் பார்த்தோம்" என்றான் வில்லாளன்.

"ஏழு கடலைத் தாண்டி மேகமலைக்குப் போனாலும் உன்னால் தங்கக்கிளியைப் பிடிக்க முடியாது" என்று புலிக்கண்ணன் கூறினான்.

"மேகமலையில் மாயன் என்ற மந்திரவாதி இருக்கிறான். அவனது மாயசக்திக்குக் கட்டுப்பட்டது, தங்கக்கிளி. எனவே, அதை யாராலும் பிடிக்க முடியாது. மாயனைக் கொன்றால்தான் பிடிக்க முடியும்" என்று புலிக்கண்ணன் சொன்னான்.

ஒன்றுமே தெரியாதவன் போல, "அப்படியா? இதெல்லாம் உண்மைதானா?" என்று அஞ்சாநெஞ்சன் கேட்டான்.

"உண்மைதான். இன்னொரு மந்திரவாதி இதைச் சொன்னார்" என்றான் வில்லாளன்.

"அந்த மந்திரவாதிதான் இந்த பறக்கும் கம்பளமும் கொடுத்தார்" என்றான் புலிக்கண்ணன்.

"அதுமட்டும் அல்ல மாயனைக் கொல்ல வழியும் சொல்லியிருக்கிறார்" என்றான் வில்லாளன்.

"என்ன வழி?" அஞ்சாநெஞ்சன் கேட்டான்.

"நீயும் எங்களுடன் சேர்ந்துகொண்டால் உனக்கு அந்த வழியைச் சொல்லுவோம்."

“நானும் உங்களுடன் சேர்ந்துகொள்ளுகிறேன். நாம் மூவருமாகச் சேர்ந்து மாயனைக் கொல்லலாம்.”

“தங்கக்கிளியை பிடித்துக்கொண்டு போய் கொடுத்து வேழநாட்டு வேந்தனிடம் பரிசு பெறலாம்.”

“நாம் மூவரும் பரிசைப் பெற்றுக்கொள்வோம்.”

“இளவரசி பவளத்தை வில்லாளனுக்குக் கொடுத்துவிட வேண்டும். வேழநாட்டை நாம் இருவரும் சமமாகப் பகிர்ந்துகொள்ளலாம்.”

“சரி, அப்படியே செய்வோம். மாயனை எப்படிக் கொல்லுவது?”

“ஏன் அவசரப்படுகிறாய்? நீயும் பறக்கும் கம்பளத்தில் ஏறிக்கொள். நாம் முதலில் மேகமலைக்குப் போகலாம். அங்கே போய் மற்ற விவரம் எல்லாம் சொல்லுகிறேன்” என்றான் புலிக்கண்ணன்.

இளவரசி பொற்செல்வியை தனியே விட்டுச் செல்ல அஞ்சா நெஞ்சனுக்கு விருப்பம் இல்லை.

அதேநேரம், இவர்களுடன் போனால், மந்திரவாதி மாயனுடன் போரிடுவது எளிதாக இருக்கும்.

மந்திரவாதியைக் கொன்றால்தான் இளவரசி சுயஉருவம் பெறுவாள். கல்லாக நிற்கும் மன்னரும், மக்களும் உயிர்பெற்று எழுவார்கள்.

எனவே, “சரி நானும் உங்களுடன் வருகிறேன்” என்று அஞ்சா நெஞ்சன் ஒப்புக்கொண்டான்.

மூவரும் கம்பளத்தில் ஏறி அமர்ந்தார்கள். அது வானத்தில் ஏறி பறந்தது.

இளவரசி பொற்செல்வி, எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு இருந்தாள். அவர்கள் பேசியது எதுவும் அவளுக்குக் கேட்கவில்லை.

ஆனாலும், அஞ்சாநெஞ்சனைப் பின்தொடர்ந்து செல்ல அவள் முடிவு செய்தாள். மரத்தில் இருந்து பறந்துவந்து அஞ்சாநெஞ்சனின் குதிரை மீது அமர்ந்துகொண்டாள்.

“அவர்களின் பின்னே போ” என்று பொற்செல்வி சொன்னாள்.

பறக்கும் கம்பளத்தின் பின்னே குதிரை விரைந்து ஓடியது.

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம்
ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007
ஆசிரியர்: அ.மா. சாமி. 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்



தங்கத் தீவு

தங்கத் தீவுக்குள் நுழைந்தவர்கள் தீவை அபகரிக்க முயலுகிறார்கள்! மாயாவி விடுவாரா?

பரபரக்க வைக்கும் மர்மப் படக்கதை!

படிக்கத் தவறாதீர்கள்!

அக்டோபர் 1-ந்தேதி
வெளிவருகிறது

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

பள்ளி செல்லும் பாப்பாவே!

பள்ளிக்குச் செல்லும் பாப்பாவே
பாடம் படித்து முடித்துவிட்டு
துள்ளிக் குதித்து விளையாடு
தூசி படிய ஆடாதே!

வண்டிகள் ஓடும் தெருவினிலே
மனிதர் நடக்கும் வீதியிலே
நொண்டி நொண்டி ஆடாதே
நொடிக்குள் ஆபத்து உண்டாகும்!

விளையாட்டுக்கு மைதானம்
வீட்டுப் படிப்புக்கு மின்விளக்கு
களைப்பை நீக்க நல்உறக்கம்
காண்பாய் தினமும் கண்மணியே!

பள்ளித் தோழிகள் பலர் உண்டு
பண்பாய் அவருடன் நீ பழகு
கொல்லைத் தோட்டம் அமைப்பதற்குக்
கூடி உழைப்பாய் தாயுடனே!

—செல்வி. இ. ஜீவா, புதுக்கோட்டை.

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக
32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்